**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.134/2020**

PW1 – திரிபுரசுந்தரி, க/பெ.அர்ஜுனன்
நாள் –22.03.2024.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

12.03.2024–ம் தேதியிடட தாவா சொத்திற்கான சிட்டா மற்றும் அடங்கலின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்டுகிறது.** 24.07.2020–ம் தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து எனக்கும் எனது சகோதரிக்கும் எனது தாயார் தாவா சொத்தை பொறுத்து எழுதிக்கொடுத்த பாகபாத்திய விடுதலைபத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்டுகிறது.** 24.07.2020–ம் தேதியிட்ட நானும் எனது சகோதரியும் தங்கவேல் எனபவருக்கு தாவா புல எண்ணை பொறுத்து எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்டுகிறது.**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.